**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 13.08.2025

**அசல் வழக்கு எண்.396/2019**

**பி.சா.1 – சாந்தி, க/பெ.வெங்கடேசன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் 26A மாதனபாளையத் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். வாதி ஞானசுந்தரி உங்கள் கணவரின் உடன் பிறந்த சகோதரி என்று சொன்னால் சரிதான். நீங்கள் உங்களுக்காகவும் உங்கள் மகள்கள் ஈஸ்வரி, ரேவதி, பாரதி ஆகியோருக்காகவும் சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் உங்கள் மகள்களை இந்த வழக்கில் ஒரு சாட்சியமாக விசாரிக்க போகிறீர்களா என்றால் விசாரிக்கப் போவதில்லை. உங்கள் கணவர் வெங்கடேசன் என்பவர் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் வள்ளியம்மாள், பெருமாள், வெங்கடேசன், ஞானசம்பந்தரி, முத்துக்குமார் ஆகிய 5 பேர் ஆவார்கள். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களும் உங்கள் மாமனார் சண்முக முதலியார் அவர்களுக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். அவர் சொந்தமாக சம்பாதித்த சொத்தா அல்லது பாகப்பிரிவினை வாயிலாக வந்த சொத்தா என்றால் பாகப்பிரிவினை வாயிலாக தான் வந்த சொத்து ஆகும். முத்துக்குமார் உங்கள் கணவருடன் பிறந்தவர் சுமார் 9 அல்லது 10 வயதிலேயே திருமணம் ஆகாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அப்பொழுது சுமார் 1969 ஆம் ஆண்டு இருக்கும். உங்கள் மாமனார் சண்முகம் முதலியார் எப்போது இறந்து விட்டார் என்றால் 1982ல் இறந்து விட்டார். உங்கள் மாமியார் தெய்வானை அம்மாள் எப்பொழுது இறந்துவிட்டார் என்றால் சுமார் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். உங்கள் மாமியார் உங்களுக்கு சொந்தமான சொத்தை பாகம் பிரித்துக் கொண்ட பிறகு கடந்த 03.04.2019 ல் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். நீங்கள் வசிக்கும் 26A மாதனபாளையத் தெரு, பிள்ளையார்பாளையம்,

காஞ்சிபுரம் வீட்டிற்கு எத்தனை பேர் உரிமையாளர் என்றால் தில்லை முதலியார், கன்னியப்பன், வேதகிரி, அவர்கள் அண்ணன் ஒருவர் துரைசாமி ஆகிய அனைவரும் ஒரு பாகஸ்தர் என்றால் சரிதான். உங்கள் மாமனாரின் உடன் பிறந்த சகோதரர் பாலசுந்தரம் முதலியார் அவரும் வழக்கு சொத்தில் பாகஸ்தர் என்றால் சரிதான். உங்கள் கணவரின் அண்ணன் பெருமாள் அவரும் வழக்கு சொத்தில் ஒரு பாகஸ்தர் என்றால் சரிதான். ரவி என்பவருக்கு விற்று விட்டார் என்றால் சரிதான். 14.04.1960 தேதியிட்ட ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் 2வது வழக்கு ஆவணமாக நீங்கள் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். 26A மாதனபாளையத் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் அடங்கிய சொத்தில் இரண்டு சர்வே எண்கள் உள்ளது அவை முறையே 1693 மற்றும் 1694 ஆகும் என்றால் சரிதான். பெருமாள் என்பவருக்கு சொந்தமான சொத்து தெரு வழியாக செல்ல முடியும் என்றால் செல்ல முடியாது நாராசம் வழியாக தான் செல்ல முடியும். பெருமாளுக்கு சொந்தமான சொத்து ரவி என்பவருக்கு விற்று விட்டார் அந்த இடத்திலிருந்து மாதனபாளையம் தெருவுக்கு நேரடியாக செல்லலாம் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த ஆவணம் 2ல் வெறும் சர்வே எண் 1693 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் மாமனார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் தெய்வானை அம்மாள், பெருமாள், வெங்கடேசன், முத்துக்குமார் ஆகியோருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு அன்றைய தினமே சுவாதீனம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் சரிஇல்லை. முத்துக்குமார் என்பவருக்கும் சேர்த்து தான் செட்டில்மெண்ட் எழுதி உள்ளார் என்றால் சரிதான். மனைவியை காப்பாளராக போட்டுக் கொண்டார். செட்டில்மெண்ட் ஆவணம் அசல் எங்கு உள்ளது என்றால் வீட்டில் இருக்கும் ஏன் போடவில்லை என்றால் வீட்டில் உள்ளது. நீங்கள் தாக்கல் செய்த ஆவணம் பி.சா.ஆ.2 பக்கம் 2ல் பிழை இல்லை என்று டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் அடித்து திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது அடித்து திருத்தி எழுதியது நீங்களா அல்லது வேறு யாரோ என்றால் எனக்கு தெரியாது நாங்கள் இல்லை. கடந்த 2011 ஆம் ஆண்டு நகல் போட்டு வாங்கினீர்கள் என்றால் சரிதான். முத்துக்குமார்

இறந்த பிறகு அவருடைய பாகம் அவருடைய தாயாருக்கு சென்று விட்டது என்று சொன்னால் சரி இல்லை. செட்டில்மெண்ட் ஆவணம் நிரூபணம் செய்வதற்காக சாட்சிகள் ஏதேனும் விசாரிக்க போகிறீர்களா என்றால் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் இன் படி பெருமாள், முத்துக்குமார், வெங்கடேசன் ஆகிய மூவருக்கும் மூன்றில் ஒரு பாகம் உண்டு என்று சொன்னால் சரிதான். 03.07.1984 அன்று உங்கள் கணவர் வெங்கடேசன் என்பவரும் பெருமாள் என்பவரும் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் சர்வே எண் 1693 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் உங்கள் மாமியார் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். வெங்கடேசன் என்பவரது சகோதரிகள் வள்ளி, ஞானசுந்தரியும் கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். உங்கள் மாமனார் சண்முக முதலியார் 1937 இல் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் வழக்கு சொத்துக்கள் இல்லாமல் வேறு சொத்துக்களும் அடங்கியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1937 ஆம் ஆண்டு பத்திரம் நீங்கள் தானே வழக்கில் தாக்கல் செய்தீர்கள் அதனை நீங்கள் படித்து பார்த்தீர்களா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தை நீங்கள் வழக்கில் முதல் ஆவணமாக தாக்கல் செய்து கொண்டீர்கள் என்றால் தெரியாது. உங்கள் மூத்தார் பெருமாள் மற்றும் உங்கள் கணவர் வெங்கடேசன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் ஒரு வரைபடம் உள்ளது அதனை நீங்கள் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் வரைபடத்தை மறைத்து தாக்கல் செய்து உள்ளீர்கள் உங்களிடம் காட்டப்படுகின்ற வரைபடம் அந்த வரைபடம் என்றால் அது அந்த வரைபடம் தான். அது வா.சா.ஆ.**10** ஆக குறியீடு செய்யப்பட்டது. நீங்கள் வேண்டுமென்று அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் வரைபடத்தை மறைத்து விட்டீர்கள் என்றால் சரியில்லை. அந்த வரைபடத்தில் சொத்துக்கள் நேருக்கு நேராக இல்லை வளைந்து உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் கட்டிடம் கட்டப்பட்ட பாகம்

2 பாகமாகவும் புழக்கடை பாகம் 2 பாகமாகவும் உள்ளது என்றால் சரிதான். வெங்கடேசனுக்கு ஒதுக்கப்பட்ட புழக்கடை பாகத்தில் கிழக்கு மேற்கு 9 ½ அடி வடக்கு தெற்கு 37 அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். உங்களுக்கு நாரசம் கடைசி வரை கிடையாது என்று சொன்னால் சரிதான். உங்கள் கணவர் எப்பொழுது இறந்தார் என்றால் 14.08.1994ல் இறந்து விட்டார்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.